**Judicial Form No.53**

(See Rule 43)

**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.**

C.C. No. 314/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| பெயர். | - | அருணாச்சலம் | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ. | | பரசுராமன் | சமயம் | - | |
| கிராமம் | - | விழுப்புரம் | வயது | - | 63 |

11.02.2026

1, 3 எதிரிகள் ஆஜர். 2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை. 2, 4, 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

1. நான் 31.05.2023 ம் வருடம் பெரியதச்சூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 01.12.2018 ந் தேதி காலை 10.00 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது ஏனாதிமங்கலம் கிராமத்தை சேர்ந்த விஜயரங்கன் மகன் ஆனந்த நாராயணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய சி.எஸ்.ஆர்.2043/2018 என பதிவு செய்து வைத்ததை 05.12.2018 ந் தேதி காலை 11.00 மணியளவில் நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நிலைய குற்ற எண்.921/2018 ச/பி. 147, 294(பி), 324, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆகும்.**

3. மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தமிழரசன் மற்றும் சீனிவாசன் ஆகியோர்கள்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.4, 5 ஆகும்**.

4. பின்பு ஆனந்தநாராயணன், விஜயரங்கன், ஷேஷம்மாள், சுப்பிரமணியன், பவானி, தமிழரசன், சீனுவாசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றதில் எதிரி ஜெயப்பிரகாஷ் நாராயணன் என்பவரை அன்றே 13.30 மணியளவில் சிறுவானூர் பேருந்து நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற எதிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் மூலம் முன் பிணையில் சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை.

5. பின்னர் காயம்பட்ட விஜயரங்கன் மற்றும் ஷேஷம்மாள் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. ராஜ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு அறிக்கை பெற்றேன். அதில் மருத்துவர் விஜயரங்கனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் ஷேஷம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கியுள்ளார். **அந்த விபத்து பதிவேடு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.6, 7 ஆகும்.**

6. மேற்படி கருத்தின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை ச/பி. 147, 294(பி), 324, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act என்பதிலிருந்து ச/பி. 147, 294(பி), 324, 506(2), 326 இதச மற்றும் 4 of TNPHW Act ஆக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்**. இத்துடன் எனது வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 147, 294(பி), 324, 506(2), 326 இதச மற்றும் 4 of TNPHW Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.